



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 292 | 4 Pages | 19.5.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 292 | 4 பக்கங்கள் | 19.5.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்**

**விளக்கம்:**
ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்.

# கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றாவிட்டால் எட்டாக்கனியாகிவிடும்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மே.19

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய 'தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை' என்ற புத்தகம் வெளியீட்டு விழா சென்னை அண்ணா நூலகத்தில் நடைபெற்றது.

இந்த புத்தக வெளியீட்டு விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது;

"அனைவரும் படிக்க வேண்டும் என்று சொல்வது திராவிட மாடல். இன்னார் மட்டும்தான் படிக்க வேண்டும் என்பது பாஜகவின் காவி மாடல். நம் உயர்வுக்கும், மேண்மைக்கும் அடித்தளமாக இருப்பது கல்விதான். அறிவுதான் நமது ஆயுதம். கல்விக்கு தடை போட நினைக்கும் பாஜகவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு போர் வாள் சுழற்றுகிறது. தேசியக் கல்விக்கொள்கை இட ஒதுக்கீட்டை சிதைத்து விடும். இட ஒதுக்கீடு இருக்கும் வரைதான் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உயர் கல்வி கிடைக்கும். தேசியக் கல்விக் கொள்கையால் சமஸ்கிருதம் வளர வேண்டும் என சில தினங்களுக்கு முன்பு உள்துறை மந்திரி அமித்ஷாவே சொல்லியுள்ளார்.



எது நடக்கும் என நாம் எச்சரித்தோமோ அதனை அமைச்சர் உறுதி செய்துள்ளார்.

இந்தியை தடுக்க ஒரே வழி கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டுவருவதுதான். கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றாவிட்டால், கல்வி என்பது அனைவருக்கும் எட்டாக்கனியாகிவிடும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# பின்லாந்தில் ஹெலிகாப்டர்கள் மோதி விபத்து 5 பேர் பலி




ஹெல்சின்கி, மே.19

எஸ்தோனிய தலைநகர் தாலினில் இருந்து ஒன்றாகப் புறப்பட்ட இரண்டு ஹெலிகாப்டர்கள், பின்லாந்தின் யூரா விமான நிலையத்திற்கு அருகில் சென்றுகொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானது.

இந்த கோரவிபத்தில் சம்பவ இடத்திலேயே ஹெலிகாப்டர்களில் இருந்த 5 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். ஒரு ஹெலிகாப்டரில் இரண்டு பேரும், மற்றொன்றில் மூன்று பேரும் இருந்ததாக போலீசார் தெரிவித்தனர். மேலும் இரண்டு ஹெலிகாப்டர்களும் பின்லாந்திற்கு வெளியே பதிவு செய்யப்பட்டவை என்வும் ஒரு ஹெலிகாப்டர் எஸ்டோனியாவிலும், மற்றொன்று ஆஸ்திரியாவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

கவுட்டுவா நகருக்கு அருகே, ஓஹிகுல்குட்டி சாலையில் இருந்து சுமார் 700 மீட்டர் தொலைவில் ஹெலிகாப்டரின் பாகங்கள் விழுந்துகிடப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து தொடர்பாக தேசிய புலனாய்வுப் பிரிவு உள்ளூர் காவல்துறையினருடன் கூட்டு விசாரணையை நடத்தி வருகிறது.

# பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என விஜய் கூறவில்லை தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, மே.19

வரும் 2026 சட்டசபை தேர்தலில் பா.ஜ.க.வுடன் நிச்சயம் கூட்டணி கிடையாது என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப்பிரிவு துணை பொதுச்செயலாளர் சிடிஆர் நிர்மல் குமார் கூறி இருந்தார்.

இந்த நிலையில் சென்னையில் பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என த.வெ.க. அதிகாரப்பூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை. த.வெ.க. தலைவர் விஜய்தான். பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என இதுவரை கூறவில்லை.

பிறர் கூறுவதற்கு பதில் சொல்ல முடியாது. தி.மு.க.வுக்கு எதிராக எல்லோருமே ஒன்று சேர வேண்டிய சூழல் நமக்கு வந்திருக்கிறது. தி.மு.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும் என எண்ணுபவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்; ரிக்டர் அளவில் 4.6 ஆக பதிவு

ஜகார்தா, மே.19

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 2.50 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. வடக்கு சுமத்ராவில் 58 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.6 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்தன. ஆனாலும், இந்த நிலநடுக்கத்தில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோட்டில் நடந்த இரட்டை கொலை 3 பேர் கைது



ஈரோடு, மே.19

ஈரோடு மாவட்டம் சிவகிரி விலாங்காட்டு வலசு கிராமத்தை சேர்ந்தவர் ராமசாமி (75). அவரது மனைவி பாக்கியம் (65). இவர்களுக்கு கவிசங்கர் என்ற மகனும், பானுமதி என்ற மகளும் உள்ளனர்.

மகன், மகள் தனியாக வசித்து வரும் நிலையில் ராமசாமி, மனைவி பாக்கியத்துடன் விலாங்காட்டு வலசு பகுதியில் வசித்து வருவதுடன் ஆடு மாடுகளை வைத்து விவசாயம் செய்து வருகிறார்.

இந்த சூழலில், கடந்த 1ம் தேதி மகன் கவிசங்கர் செல்போன் மூலம் அழைத்தும் தந்தை எடுக்காததால் அருகில் உள்ள உறவினர்கள் மூலமாக வீட்டிற்குச் சென்று பார்க்கச் சொல்லி உள்ளார். வீட்டில் துர்நாற்றம் வீசியதை தொடர்ந்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.


விரைந்து வந்த போலீசார் நடத்திய விசாரணையில், கணவன், மனைவி இருவரும் கொலை செய்யப்பட்டதும் வீட்டில் இருந்த 12 பவுன் நகைகள் கொள்ளை போனதும் தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு வந்த காவல் கண்காணிப்பாளர் சுஜாதா விசாரணை மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மோப்பநாய் பிரிவினர், கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரிக்கும் பணி நடைபெற்றது. இதனையடுத்து இந்த இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக 12 தனிப்படைகள் அமைக்கப்பட்டு போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் முதிய தம்பதி கொல்லப்பட்ட வழக்கில் 3 பேர் பிடிபட்டுள்ளனர்.

இதனையடுத்து போலீசார் அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காசாவில் இஸ்ரேல் விமான படை திடீர் தாக்குதல்; 146 பேர் பலி



ஜெருசலேம், மே.19

ஹமாஸ் அமைப்புக்கு பதிலடி தரும் வகையில், காசாவில் ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில், 53 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

எனினும், இவர்களில் எத்தனை பேர் பொதுமக்கள் என்றோ அல்லது வீரர்கள் என்றோ விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், 20 ஆயிரம் பயங்கரவாதிகள் பலியாகி உள்ளனர் என சான்றுகள் எதனையும் வெளியிடாமல் இஸ்ரேல் கூறுகிறது.

நாங்கள் பயங்கரவாதிகளையே இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவர்கள் (ஹமாஸ் அமைப்பினர்) செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் குற்றச்சாட்டாக கூறியது.

இந்நிலையில், காசா முனையின் டெய்ர் அல்பலா மற்றும் கான் யூனிஸ் ஆகிய நகரங்களின் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை தாக்குதல் நடந்தது. இஸ்ரேல் நடத்திய இந்த திடீர் தாக்குதலில் 64 பேர் பலியானார்கள்.

இந்த சூழலில், காசாவில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேல் விமான படை புதிதாக நடத்திய தாக்குதலில் 146 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆனால், உள்ளூர் சுகாதார அதிகாரிகள் கூறும்போது, 459 பேர் காயமடைந்து உள்ளனர் என தெரிவித்தனர்.

புதிதாக தரை வழி தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டிருந்த நிலையில், இந்த தகவல் வெளிவந்துள்ளது. கடந்த வியாழ கிழமையில் இருந்து கொடூர தாக்குதலை இஸ்ரேல் நடத்தி வருகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படாமல் போனது. இந்த சூழலில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணம் நேற்று முடிந்தது. எனினும், புதிய போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்துவதில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

டிரம்பின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான சுற்றுப்பயணம் முடியும் வரை தாக்குதல் நடத்தப்படாது என இந்த மாத தொடக்கத்தில் இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியிருந்த நிலையில், இஸ்ரேலின் தாக்குதல் நடந்துள்ளது.

காசாவில் 76 நாட்களுக்கு முன்பே, நிவாரண உதவிகளை இஸ்ரேல் தடுத்து நிறுத்தி விட்டது. இந்நிலையில், பஞ்சம் பரவியுள்ளது என ஐ.நா. நிபுணர்கள் எச்சரிக்கை தெரிவித்து உள்ளனர். இனப்படுகொலைகளை தடுக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நடவடிக்கை எடுக்க என்ன செய்ய போகிறது? என அதன் நிவாரண உதவிக்கான தலைவர் பிளெட்சர் வார தொடக்கத்தில் கேள்வி எழுப்பினார்.

டிரம்பும், காசாவில் பசி நெருக்கடி அதிகரித்து வருகிறது. நிவாரண உதவிக்கான தேவையும் அதிகரித்து காணப்படுகிறது என நேற்று ஒப்பு கொண்டார். காசா முற்றுகையை நிறுத்தும்படியும், பேச்சுவார்த்தைக்கு மீண்டும் திரும்பும்படியும் சர்வதேச அளவில் இஸ்ரேலுக்கு அழுத்தம் தரப்பட்டு வருகிறது.

ஆனால் இஸ்ரேலோ தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இந்த வார தொடக்கத்தில் கூறும்போது, காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் குழுவை அழிக்கும் நோக்கில் காசா முனையில் இஸ்ரேலின் போர் தீவிரப்படுத்தப்படும் என கூறினார். நெதன்யாகு கூறியதன்படி, இந்த நடவடிக்கை (தாக்குதல்) தொடங்கப்பட்டு உள்ளதா? என்ற விவரம் தெளிவாக தெரிய வரவில்லை.

# தென்காசி: சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பா.ஜ.க. நிர்வாகி




தென்காசி மே.19

தென்காசி மாவட்ட பா.ஜ.க. செயற்குழு உறுப்பினர் நீலகண்டன். பாவூர்சத்திரத்தை சேர்ந்த இவர் கடந்த 2023ம் ஆண்டு தனது குடும்ப நண்பர் வீட்டிற்கு சென்றுள்ளார். அங்கு அவரது நண்பரின் 15 வயது மகளுக்கு நீலகண்டன் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். மேலும், இது குறித்து யாரிடமும் சொல்லக்கூடாது என்று துப்பாக்கியை வைத்து சிறுமியை மிரட்டியு ள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை ஆலங்குளம் போலீசில் புகார் அளித்தார். ஆனால், புகார் அளித்தும் போலீசார் நீலகண்டன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதையடுத்து, சிறுமியின் தந்தை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த கோர்ட்டு பா.ஜ.க. நிர்வாகி மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டது.

இந்நிலையில், கோர்ட்டு உத்தரவை தொடர்ந்து சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பா.ஜ.க. நிர்வாகியும், மாவட்ட செயற்குழு உறுப்பினருமான நீலகண்டன் மீது ஆலங்குளம் போலீசார் போக்சோவில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# தஞ்சை: நாட்டு வெடி குடோனில் விபத்து இருவர் பலி

தஞ்சை, மே.19

தஞ்சை மாவட்டம் திருவோணம் அருகே நெய்வேலி தென்பாதி பகுதியில் முறையான அனுமதி இன்றி வெடி குடோன் ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த நாட்டு வெடி குடோனில் பலர் வேலை செய்து வந்தனர்.

இந்த நிலையில் இன்று இந்த குடோனில் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் ரியாஸ் (வயது 18) உள்பட 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

விபத்தில் உயிரிழந்த 2 பேரின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில் வெடி குடோன் அனுமதியின்றி செயல்பட்டு வந்தது தெரியவந்துள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜூலை 1 முதல் மின்கட்டணம் உயர்வா? ராமதாஸ் கண்டனம்

சென்னை, மே.19

பாமக நிறுவனர் ராமதாஸ் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"ஜூலை 1ஆம் தேதி முதல் 3.16% மின்கட்டண உயர்வா? மக்களை வதைக்கும் கட்டண உயர்வு திட்டத்தைக் கைவிட வேண்டும்!

தமிழ்நாட்டில் வரும் ஜூலை ஒன்றாம் தேதி முதல் வீடுகள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து மின் இணைப்புகளுக்குமான மின் கட்டணம் 3.16% உயர்த்தப்படவிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. வாழ்க்கையின் சுமைகளையும், வரிச்சுமைகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தமிழ்நாட்டு மக்கள் தவித்து வரும் நிலையில் மீண்டும் ஒருமுறை மின்சாரக் கட்டணத்தை உயர்த்த தமிழக அரசு துடிப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. அது தொடர்பாக அப்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பிறப்பித்த ஆணையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு நிதியாண்டின் ஏப்ரல் மாதத்திற்கான பண வீக்க விகிதம் அல்லது 6 விழுக்காடு இவற்றில் எது குறைவோ அந்த அளவுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. அதன்படி நடப்பாண்டின் ஏப்ரல் மாத பணவீக்கம் 3.16 விழுக்காடு எனத் தெரியவந்திருப்பதால், அந்த அளவுக்கு கட்டணத்தை உயர்த்த தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் இழப்பில் இயங்குவதாகவும், அதை லாபத்தில் இயங்கச் செய்வதற்காகத் தான் மின்கட்டணம் உயர்த்தப்படுவதாகவும் தமிழக அரசின் சார்பில் கூறப்படுகிறது. ஆனால், இது ஒரு மாயை தான். மின்கட்டணம் உயர்த்தப்படாததால் தான் மின்சார வாரியம் இழப்பை எதிர்கொண்டு வருகிறது என்பதோ, மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் மின்வாரியம் லாபத்தில் இயங்கும் என்பதோ உண்மையல்ல. இதை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு செலவு கணக்கு குறித்த புள்ளி விவரங்களே உறுதி செய்கின்றன.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட மின்சார கட்டண உயர்வின் மூலம் அந்த ஆண்டின் 7 மாதங்களில் மட்டும் மின்சார வாரியத்திற்கு ரூ.23,863 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது. ஆண்டு முழுவதற்கும் கணக்கிட்டால் ரூ.31,500 கோடி கூடுதல் வருமானம் கிடைத்திருக்கக்கூடும். அதற்கு முன் மின்வாரியம் ஆண்டுக்கு சுமார் ரூ.9000 கோடி இழப்பில் இயங்கி வந்தது. மின் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகு 202223ஆம் ஆண்டில் மின் வாரியத்திற்கு குறைந்தது 14,000 கோடி லாபம் கிடைத்திருக்க வேண்டும். மின்வாரியத்தின் இழப்பு அந்த ஆண்டில் ரூ. 10,000 கோடியாக அதிகரித்தது.

2023ஆம் ஆண்டில் வணிக நிறுவனங்களுக்கான மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதால், அந்த ஆண்டில் ரூ.35,000 கோடி கூடுதல் வருவாய் கிடைத்திருக்கக் கூடும். அதன்படி பார்த்தால் 2023 24ஆம் ஆண்டில் மின்வாரியம் குறைந்தது ரூ.26,000 கோடி லாபம் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், ரூ.6920 கோடி இழப்பைச் சந்தித்துள்ளது. கடந்த ஆண்டில் 4.83% மின்கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால், கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டிலும் மின்சார வாரியம் நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. மின்வாரியத்தின் இழப்புக்குக் காரணம் தனியாரிடமிருந்து அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்படுவது தான். அதற்கு முடிவு கட்டி, நிலுவையில் உள்ள மின் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தான் மின் வாரியத்தை லாபத்தில் இயக்க முடியும். எனவே, ஜூலை மாதம் முதல் மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். மாறாக, மின் திட்டங்களை விரைவுபடுத்துவது உள்ளிட்ட சீர்திருத்தங்களை மின்வாரியம் மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.



தினகனி



# திமுக அரசின் மீது அவதூறை அள்ளி வீசுகிறார் எடப்பாடி பழனிசாமி: ஆர்.எஸ்.பாரதி



சென்னை, மே.19

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

"பொழுது விடிந்தால் திமுக அரசுக்கு எதிராக எந்த அவதூறைப் பரப்பலாம் எனப் பித்தாலாட்ட அரசியல் செய்யவதையே முழுநேரப் பணியாகச் செய்து கொண்டிருக்கிறார் பித்தலாட்ட பழனிசாமி. கல்வி உரிமைச் சட்டத்தின் படி தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்க வேண்டிய 617 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்கு ஒதுக்காமல் அராஜகம் செய்து கொண்டிருக்கும் தனது டெல்லி எசமானர்களைக் காப்பாற்ற திமுக அரசின் மீது அவதூறை அள்ளி வீசியிருக்கிறார்.

தமிழ்நாட்டு மாணவர்களின் நலனைக் காப்பதில் திராவிட மாடல் அரசும் தமிழ்நாடு முதலமைச்சரும் எடுத்து வரும் நடவடிக்கைகளினால் பள்ளிக் கல்வியில் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் செயல்திறனை அண்மையில் வெளியான பொதுத் தேர்வு முடிவுகளின் தேர்ச்சி விகிதம் சொல்லும்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் பார்த்து பார்த்து செய்யும் திட்டங்களால் இன்றைக்கு அரசு பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 74 விழுக்காடாக உயர்ந்து வரலாற்றுச்சாதனைப் படைக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 96 விழுக்காட்டைத் தொட்டுச் சாதனைப் படைக்கப் பட்டிருக்கிறது.

இந்தச் சாதனைகள் எல்லாம் தமிழ்நாட்டின் மீது வன்மத்துடனும் வயிற்றெரிச்சலுடனும் செயல்படும் தமிழர் விரோத ஒன்றிய அரசுக்கு எரிச்சலூட்டுவதில் ஆச்சரியமில்லை. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல் மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய 2152 கோடி ரூபாயை ஒதுக்குவோம் என மிரட்டியது ஒன்றிய அரசு, மிரட்டலுக்கு அஞ்சி அடிபணிய இது ஒன்றும் மானங்கெட்ட அடிமை அதிமுக ஆட்சி அல்ல, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசு, அந்தத் தொகையையும் மாநில அரசே ஏற்கும் என அறிவித்து மாணவர்களின் கல்வி உரிமையைக் காத்து நின்றது.

தரங்கெட்ட மொழியில் பச்சைப் பொய்களை அறிக்கையாக வெளியிட்டால் அவை உண்மையாகிவிடாது என்பதை அறியாமல் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் எனும் பொறுப்பிற்குக் கொஞ்சமும் தகுதியற்ற முறையில் பாஜகவின் வாட்சப் யூனிவர்சிட்டி தகவல்களை அறிக்கையாக வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறைக்கு வரலாற்றில் இல்லாத வகையில் நிதியை ஒதுக்கி சாதனைப் படைத்திருக்கிறது. தனது ஆட்சியையே தமிழ்நாட்டு உரிமைகளைப் பாஜகவிடம் அடகு வைக்கும் அடிமை விளையாட்டாக நடத்திய பழனிசாமியின் பித்தலாட்டங்கள் ஒரு நாளும் மக்களிடம் வெற்றியடையாது."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் 18 பேருக்கு கொரோனா தொற்று



சென்னை, மே.19

சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது.

இந்தியாவிலும் கொரோனா பரவல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை நடத்தியதில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் 18 பேர் கொரோனா தொற்றுக்கு ஆளாகி இருப்பது தெரிய வந்துள்ளது.

இது தவிர புதுச்சேரியில் 13 பேரும், கேரளாவில் 15 பேரும், கர்நாடகாவில் 4 பேரும், மகாராஷ்டிராவில் 7 பேரும், டெல்லியில் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வீரியமில்லாத கொரோனா என்பதால் பொதுமக்கள் அச்சப்பட தேவை

இல்லை என்றும் பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# தோரணமலையில் கோடை விழா: மாணவ மாணவிகள் யோகா, கராத்தே செய்து சாதனை



தென்காசி, மே.19

தென்காசி மாவட்டம் தோரணமலையில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் கோடை விடுமுறை கொண்டாட்டம் நடைபெறும். அதேபோல் இந்த ஆண்டும் கோடை கொண்டாட்டம் நடந்து வருகிறது. இன்றும் (18.5.2025) கோடை கொண்டாட்டம் அமர்களப் பட்டது.

பொதுவாக ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் மலையேறும் பக்தர்கள் காலையிலேயே தோரணமலைக்கு வருகை தருவார்கள். இன்று கோடை விழாவை கொண்டாட மாணவமாணவிகள் ஏராளமானோர் திரண்டனர். இதனால் கோவில் வளாகம் களைகட்டியது.

காலை எட்டு மணிக்கு மாணவர்கள் தங்கள் திறமையை காட்டித்தொடங்கினார்கள். முதலில் சிறுவர் சிறுமியர் திருக்குறளை ஒப்புவித்தனர். இதனை அடுத்து கயத்தாறில் இருந்து வந்த மாணவமாணவிகள்யோகா மற்றம் நடனம் நிகழ்ச்சி நடத்தினார்கள். இதனை அடுத்து கடையத்தில் இருந்த வந்த விவிஸ்போட்ஸ் குழுவைச் சேர்ந்த மாணவமாணவிகள் கராத்தே மற்றும் வாள்பயிற்சி செய்து காட்டினர்.

தொடர்ந்து, ஆலங்குளம் ரெட்டியார்பட்டி, கழநீர்குளம், ஓடை மறிச்சான் பகுதியைச் சேர்ந்தவர்கள் யோகா மற்றும் பல்வேறு சாகச நிகழ்ச்சி செய்து காட்டி பொதுமக்களை வியக்க வைத்தனர். அதன்பின்னர் பூலாங்குளம் சிலம்பம் குழுவினர் சிலம்பம் ஆடினர்.

கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து பாரம்பரிய விளையாட்டான பம்பரம், கோலி விளையாடினார்கள். அவர்களுக்கு அந்த கால தின்பண்டமான கடலை மிட்டாய் வகைகள் மற்றும் இயற்கை குளிர்பானம் கொடுக்கப்பட்டது. கோவிலுக்கு வந்திருந்த அனைவருக்கும் காலை சிற்றுண்டியும், மதியம் சாப்பாடும் பரிமாறப் பட்டது.

இன்று கோவிலுக்கு வந்த மாணவமாணவிகள் பலர் அங்குள்ள நூல் நிலையத்திற்கு சென்று படித்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் ஆ.செண்பகராமன் செய்திருந்தார்.

# தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை: கலெக்டர் தகவல்

தூத்துக்குடி மே.19

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியின் 20252026ஆம் கல்வியாண்டிற்கான நேரடி இரண்டாமாண்டு/முதலாமாண்டு (முழு நேரம் மற்றும் பகுதி நேரம்) மாணவர் சேர்க்கை விண்ணப்பத்தினை https://www.tnpoly.in என்ற இணையதள முகவரியில் 7.5.2025முதல்23.5.2025 வரை விண்ணப்பிக்கலாம். இதில் நேரடி இரண்டாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு பிளஸ் 2 மதிப்பெண் சான்றிதழ் அல்லது 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் + ஐ.டி.ஐ. மதிப்பெண் சான்றிதழ், சாதிசான்றிதழ் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவற்றை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்கள் முதலாமாண்டு சேர்க்கை பெறலாம். 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் மற்றும் புகைப்படத்தை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இதற்கான விண்ணப்ப கட்டணம் ரூ.150 ஆகும். SC/ST மாணவ /மாணவியர்களுக்கு விண்ணப்ப கட்டணம் கிடையாது. மற்ற மாணவ/ மாணவிகள் விண்ணப்ப கட்டணத்தை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு மற்றும் இணையதள வங்கி சேவை மூலம் செலுத்தலாம்.

இக்கல்லூரியின் குறியீட்டு எண் 118 ஆகும். இக்கல்லூரியில் நேரடி இரண்டாமாண்டு மாணவர்களுக்கு DCE, DME, EEE, ECE, LOGISTICS TECHNOLOGY ஆகிய பாடப்பிரிவுகள் உள்ளன. மேலும் முதலாமாண்டு முழுநேர மாணவர்களுக்கு DCE, DME, EEE, ECE, LOGISTICS TECHNOLOGY, RENEWABLE ENERGY ஆகிய பாடப்பிரிவுகளும், பகுதிநேர மாணவர்களுக்கு DCE, DME, EEE ஆகிய பாடப்பிரிவுகளும் உள்ளன. இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவ/மாணவிகள் சேவை மையம் மூலமாக விண்ணப்பிக்கலாம். மேலும், இக்கல்லூரி TNEA பொறியியல் மாணவர்கள் சேர்க்கை (TFC50) சேவை மையமாக உள்ளதால் நேரடியாக கல்லூரிக்கு வந்து விண்ணப்பிக்க உரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 9600693388, 9585655506, 9578912267, 0461 2311647 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒரே நாளில் 4 இளம்பெண்கள் மாயம்... சின்னசேலம் அருகே அதிர்ச்சி

கள்ளக்குறிச்சி, மே.19

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் சுற்று வட்டார பகுதிகளான, சிறுமங்கலம், பாண்டிய குப்பம், தொட்டியம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த 4 பெண்கள் ஒரே நாளில் காணாமல் போன சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 22 வயதான பூமிகா, கல்லூரியில் பயின்று வரும் சந்தியா, 19 வயதான தனுஜா மற்றும் பவித்ரா ஆகிய நான்கு இளம்பெண்கள் மாயமாகியுள்ளனர்.

நான்கு பேரும் வெவ்வேறு கிராமத்தை சேர்ந்தவர்கள். வெவ்வேறு நேரத்தில் காணாமல் போயுள்ளனர். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தனிப்படை அமைத்து தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# தென்காசி: இடம் விற்று தருவதாக கூறி ரூ.2 கோடி மோசடி செய்த கார் டிரைவர் கைது



தென்காசி மே.19

தென்காசி அருகே வல்லத்தை சேர்ந்தவர் ராமச்சந்திரன் சுவாமி. இவர் மற்றும் இவரது மனைவி வெளிநாடு வாழ் இந்தியர்கள்.

இவர் வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வரும் போது செங்கோட்டையை சேர்ந்த காளிதாஸ் என்ற கார் டிரைவர் பழக்கமானார். நீ

ண்ட நாட்கள் பழகியதில் காளிதாஸ், தான் நில புரோக்கராக இருப்பதாக கூறியுள்ளார். அதன் அடிப்படையில் சில நிலங்களை அவர் மூலம் ராமச்சந்திரன் சுவாமி வாங்கி உள்ளார்.

இதன் பிறகு ராமச்சந்திரன் சுவாமி வாங்கிய ஒரு இடத்தை விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார்.

அதற்கு காளிதாஸ் நான் விற்றுத் தருகிறேன் என்றும் எனது பெயருக்கு நீங்கள் பவர் எழுதிக் கொடுங்கள் என்றும் கூறியுள்ளார். அதன்படி அவரும் எழுதிக் கொடுத்துள்ளார்.

இதன் பிறகு அந்த இடத்தை காளிதாஸ் வேறு ஒருநபருக்கு விற்று விட்டார். ஆனால் அதற்குரிய பணத்தை ராமச்சந்திரன் சுவாமிக்கு கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

மேலும் ராமச்சந்திரன் சுவாமியின் வங்கிக் கணக்கில் இருந்து அவரது ஒப்புதலின்படி ரூ.1 கோடியே 8 லட்சத்து 96 ஆயிரம் காளிதாஸ் எடுத்ததாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே இடம் விற்றதில் ரூ.1 கோடியே 11 லட்சத்து 24 ஆயிரம் காளிதாஸ் தர வேண்டும். இதுகுறித்து கேட்பதற்காக ராமச்சந்திரன்சுவாமி பலமுறை போன் செய்தும் அவர் எடுக்கவில்லை.

இதுகுறித்து நேரில் சென்று அவரிடம் கேட்ட போது காளிதாஸ், அரிவாளால் வெட்டி விடுவேன் எனவும், காரை ஏற்றி கொலை செய்து விடுவேன் எனவும் மிரட்டியதாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து ராமச்சந்திரன் சுவாமி தென்காசி மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். அதன் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து காளிதாசை கைது செய்தனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம்: மண்ணில் புதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கு வீரவணக்கம் விஜய்



சென்னை, மே.19

இலங்கையில் இறுதிக் கட்ட போரின்போது தமிழர்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலையின் 16வது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப் பட்டு வருகிறது. ஏராளமானவர்கள் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தையொட்டி, த.வெ.க.தலைவர்விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"உலகெங்கும் வசிக்கும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு, நம்பிக்கை ஊட்டும் நல்லுறவுகளாக நாம் இருப்போம் என்று முள்ளிவாய்க்கால் நினைவு தினமான இன்று உறுதி ஏற்போம்.

மண்ணில் விதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கும், உலகிற் சிறந்த உயர்தனி வீரத்திற்கும் நினைவஞ்சலியும் வீரவணக்கமும். மாமக்கள் போற்றுதும்! மாவீரம் போற்றுதும்!"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10ம் வகுப்பு தேர்வு: 5 இரட்டையர்கள் ஒரே மதிப்பெண்ணை எடுத்த ருசிகரம்



சென்னை, மே.19

எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 28ந்தேதி முதல் கடந்த மாதம் (ஏப்ரல்) 15ந்தேதி வரைநடந்து முடிந்தது.

இந்த தேர்வை 4 லட்சத்து 36 ஆயிரத்து 120 மாணவர்கள், 4 லட்சத்து 35 ஆயிரத்து 119 மாணவிகள் என மொத்தம் 8 லட்சத்து 71 ஆயிரத்து 239 பேர் எழுதி இருந்தனர். தேர்வு முடிவை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று காலை 9 மணிக்கு வெளியிட்டார்.

மாணவ மாணவிகள் பள்ளிகளில் கொடுத்திருந்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்ட செல்போன் எண்ணுக்கு மதிப்பெண் அனுப்பப் பட்டன. இதுதவிர, www.tnresults.nic.in, www.dge.tn.gov.in, /results.digilocker.gov.in/ என்ற இணையதளங்கள் வாயிலாகவும் மாணவ மாணவிகள் தேர்வு முடிவை அறிந்து கொள்ள வசதிகள் செய்யப்பட்டன. அதிலும் ஆர்வமுடன் மாணவ மாணவிகள் தேர்வு முடிவை பார்த்தனர்.

தேர்வு எழுதிய 8 லட்சத்து 71 ஆயிரத்து 239 பேரில், 4 லட்சத்து 78 மாணவர்கள், 4 லட்சத்து 17 ஆயிரத்து 183 மாணவிகள் என மொத்தம் 8 லட்சத்து 17 ஆயிரத்து 261 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று இருந்தனர். இதன் தேர்ச்சி சதவீதம் 93.80 ஆகும். மாணவர்களைவிட 4.14 சதவீதம் மாணவிகள் அதிகம் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர். ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதத்தை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2.25 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு தேர்ச்சி சதவீதம் 91.55 ஆகும்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதை பார்க்க முடிகிறது. அந்தவகையில் கடந்த 2022ம் ஆண்டில் இருந்து 2025ம் ஆண்டு வரையிலான தேர்ச்சி சதவீதம் முறையே 90.07 சதவீதம், 91.39 சதவீதம், 91.55 சதவீதம், 93.80 சதவீதம் ஆகும்

இந்த நிலையில் கோவை, மதுரை, சேலம், கோவில்பட்டியில் 10ம் வகுப்பு தேர்வில் ஒரே மதிப்பெண் எடுத்து 5 இரட்டையர்கள் ஒரே மதிப்பெண்ணை எடுத்த ருசிகரம் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மதுரை திருப்பாலை பகுதியை சேர்ந்தவர் ரமேஷ் குமரவேல். இவரது மகள்கள் மாயாஸ்ரீ, மகாஸ்ரீ இரட்டையர்களான இவர்கள் சிம்மக்கல் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தனர். நேற்று தேர்வு முடிவுகள் வெளியானது. இதில் இரட்டையர்களான மாயாஸ்ரீ, மகாஸ்ரீ ஆகியோர் ஒரே மதிப்பெண்கள் பெற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தினர். இதில் மாயாஸ்ரீ எடுத்த மதிப்பெண்கள் விவரம் வருமாறு:

தமிழ் 96, ஆங்கிலம் 96,கணிதம் 95, அறிவியல் 95, சமூக அறிவியல் 93

மகாஸ்ரீதமிழில் 98, ஆங்கிலம் 96, கணிதம் 92,அறிவியல் 94, சமூக அறிவியல் 95, இருவரின் மொத்த மதிபெண்களும் 475 ஆகும். 5 பாடங்களில் வெவ்வேறு மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும் ஒட்டுமொத்தமாக இருவரும் ஒரே மதிப்பெண்ணாக 475 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மதுரை மாவட்டம் மேலும் அருகே உள்ளது. கீழையூர் இந்த ஊரை சேர்ந்தவர் வைரவன் இவர் வட்டா காங்கிரஸ் கமிட்டி நிர்வாகி. இவரது மகன்கள் ராமநாதன், லட்சுமணன் இருவரும் இரட்டையர்கள். இவர்கள் இருவரும் மேலும் தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதினர். நேற்று வெளிவந்த மதிப்பெண் பட்டியலில் இவர்கள் இருவரும் ஒரே மாதிரியாக 459 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 5 பாடங்களில் வெவ்வேறு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் ஒட்டுமொத்தமாக இருவரும் 459 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

கோவையை சேர்ந்த இரட்டை சகோதிரிகள் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் ஒரே மதிப்பெண் பெற்றுள்ளனர். கோவை ராமநாதபுரம் ஒலம்பஸ் பகுதியை சேர்ந்தவர்கள் சுந்தர்ராஜன் பாரதி செல்வி தம்பதியர். இந்த தம்பதிக்கு கவிதா, கனிகா என 2 மகள்கள் உள்ளனர். இவர்கள் இருவரும் இரட்டை சகோதரிகள்.

இவர்கள் 2 பேரும் கோவை ராமநாதபுரம் மாநகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைபள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தனர். நேற்று 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது. இதில் இரட்டை சகோதரிகள் 2 பேரும் ஒரே மாதிரியாக 474 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

இதில் கவிதா தமிழில் 95,ஆங்கிலம் 98,கணிதம் 94,அறிவியல் 89, சமூக அறிவியல் 95 மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

கனிகா தமிழில் 96, ஆங்கிலம் 97, கணிதம் 94, அறிவியல் 92, சமூக அறிவியல் 95 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர்கள் கணித பாடத்திலும் ஒரே மாதிரியாக மதிப்பெண்கள் எடுத்து உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ராஜுவ் நகர் 6வது தெருவை சேர்ந்தவர் வக்கீல் சங்கர் கணேஷ். இவர் கோவில்பட்டி வக்கீல் சங்க தலைவராக இருந்து வருகிறார். இவருடைய மனைவி மீனா. இந்த தம்பதியின் மகன்கள் ஹரிகரன், செந்தில் நாதன் இந்த இரட்டை சகோதரர்கள் இருவரும் கோவில்பட்டியில் உள்ள காமராஜ் மெட்ரிக் மேல் நிலை பள்ளியில் 10 வகுப்பு பயின்றனர்.

நேற்று தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் மாணவர்கள் ஹரிஹரன், செந்தில்நாதன் இருவரும் தலா 457 மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒரே மதிப்பெண்கள் எடுத்துள்ள இரட்டை சகோதரர்களை அப்பள்ளி நிர்வாகம் ஆசியர்கள், சக மாணவர்கள் பாராட்டினர்.

மாணவர் ஹரிஹரன் பாடவாரியாக தமிழில் 94, ஆங்கிலம் 91, கணிதம் 83, அறிவியல் 94, சமூக அறிவியலில் 95 மதிப்பெண்கள் எடுத்துள்ளார். இதே போன்று மாணவர் செந்தில் நாதன் பாடவாரியாக தமிழில் 83, ஆங்கிலத்தில் 91, கணிதத்தில் 93, அறிவியலில் 100, சமூக அறிவியலில் 90 மதிப்பெண்கள் எடுத்துள்ளார். இருவரும் ஒரே பள்ளியில் படித்தாலும் வெவ்வேறு பிரிவுகளில் படித்தது குறிப்பிடத்தக்கது.

சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி தாதனூர் பகுதியை சேர்ந்தவர் மணி தீபா தம்பதியின் மகள்கள் இரட்டையர்கள். இவர்களது பெயர் இதழ்யா மற்றும் இதழ்யாதினி. 2 பேரும் அயோத்தியாபட்டணம் அருகே உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு தேர்வு எழுதினர். தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் இரட்டை சகோதிரிகள் இருவரும் 475 மதிப்பெண்கள் எடுத்து சாதனை படைத்தனர். இதையடுத்து இருவரும் தமிழ் பாடத்தில் 97, ஆங்கில பாடத்தில் 98, அறிவியல் பாடத்தில் 94, என 3 பாடத்திலும் இருவரும் ஒரே மதிப்பெண்கள் பெற்று அசத்தி உள்ளனர். இந்த சகோதரிகளுக்கு பெற்றோர் மற்றும் தோழிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்

தூத்துக்குடி, மே.19

திருச்செந்தூர் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள் மற்றும் சில சாதாரண நாட்களிலும் கடல்நீர் உள்வாங்குவது வழக்கமான நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், திருச்செந்தூரில் இன்று சுமார் 50 அடிக்கு கடல் நீர் உள்வாங்கி காணப்பட்டது. இதனால் கடலில் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. ஆபத்தை உணராமல் பாறைகள் மேல் நின்று பக்தர்கள் செல்பி எடுத்தனர். கடல் உள்வாங்கிய பகுதிகளில் காவல்துறையினர் மற்றும் கோவில் கடற்கரை பாதுகாப்பு பணியினர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். மேலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்த வித அச்சமும் இன்றி வழக்கம் போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.



# ரெயில் சுரங்கப் பணிகளுக்கும், சாலை பள்ளத்திற்கும் தொடர்பு இல்லை: சென்னை மெட்ரோ நிர்வாகம் விளக்கம்

சென்னை, மே.19

சென்னையில் சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தில் கார் விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. சென்னை தரமணி திருவான்மியூர் சாலையில் டைடல் பார்க் அருகே இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது.

சாலையில் ஏற்பட்ட பள்ளத்தில் கார் கவிழ்ந்த நிலையில், காரில் இருந்த கைக்குழந்தை உட்பட 5 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது .இதனால் தரமணி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில் , மெட்ரோ ரெயில் பணிகளால் சாலையில் பள்ளம் ஏற்பட்டதாக தகவல் பரவி வந்தது . இந்த தகவலுக்கு மெட்ரோ ரெயில் நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. மெட்ரோ ரெயில் சுரங்கப் பணிகளுக்கும், சாலை பள்ளத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை சென்னை மெட்ரோ நிர்வாகம் விளக்கமளித்துள்ளது .

# பீகார் தொழிலாளியின் மகள், தமிழில் 93 மதிப்பெண்கள் பெற்று அசத்தல்

சென்னை, மே.19

தமிழகத்தில் நேற்று பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், மொத்தமாக 93.80 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் 95.88 சதவீதமும், மாணவர்கள் 91.74 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் வழக்கமாக மாணவர்களை விட மாணவிகள் தான் இந்த வருடமும் தேர்ச்சி அதிகமாக பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளியின் மகள் ஜியா, தமிழக அரசு பள்ளியில் படித்து 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 467 மதிப்பெண்கள் பெற்று அசத்தினார். மேலும் இவர் தமிழில் 93 மதிப்பெண்கள் பெற்றுள்ளது கூடுதல் கவனம் பெற்றுள்ளது.



ஆங்கிலம் மற்றும் சமூக அறிவியலில் 99 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். தனது சக தோழிகள் மற்றும் ஆசிரியர்களுடன் பழகியதன் மூலம் தமிழை கற்றுக் கொண்டதாக ஜியா கூறினார்.

மேலும் அரசு பள்ளியில் வழங்கப்படும் மதிய உணவு இலவச சீருடை, காலனி, புத்தகங்கள் எல்லாமே நான் நன்றாக படிக்க காரணம் என ஜியா கூறியுள்ளார்.

# தேர்வில் தோல்வி: ரெயில் முன் பாய்ந்து 11ம் வகுப்பு மாணவன் தற்கொலை

திண்டுக்கல் மே.19

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோட்டை அடுத்த தர்மபுரி கிராமத்தைச் சேர்ந்தவர் டாக்சி டிரைவர் சூரிய நாராயணன். இவரது மனைவி புஸ்பலதா. இந்த தம்பதியினருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் இளைய மகன் யோகபாபு (17) என்பவர் அம்மையநாயக்கனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு தேர்வு எழுதியிருந்தார்.

இந்நிலையில் நேற்று வெளியான 11ம் வகுப்பு தேர்வு முடிவில் யோகபாபு 273/600 மதிப்பெண்கள் எடுத்தும், வணிகவியல் பாடத்தில் தோல்வியுற்றார். இதனால் விரக்தி அடைந்து மனம் உடைந்து காணப்பட்ட யோகபாபு நேற்று மாலை கொடைரோடு அருகே திண்டுக்கலில் இருந்து மதுரை மார்க்கமாக சென்ற தேஜஸ் ரயிலின் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டதாக கூறப்படுகிறது.



தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கொடைரோடு இருப்பு பாதை காவல் துறை சார்பு ஆய்வாளர் அருணோதயம், யோகபாபுவின் உடலை கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, வழக்குப் பதிவு செய்து, மாணவர் உயிரை மாய்த்துக் கொண்டது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

# தூத்துக்குடி: விபத்தில் இறந்த காவலர் குடும்பத்திற்கு ரூ.70 லட்சம் காப்பீட்டு தொகை வழங்கல்

தூத்துக்குடி, மே.19

தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த காவலர் சேசு ஆல்வின் கடந்த 10.8.2024 அன்று ஆத்தூர் பழைய காயல் அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்தார். அவர் ஸ்பிக்நகர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் போலீஸ் சேலரி பேக்கேஜ் கணக்கில் சம்பளம் பெற்று வந்தார்.




இதனையடுத்து மேற்சொன்ன வங்கி சார்பாக வழங்கப்பட்ட விபத்து காப்பீட்டுத் தொகை ரூ.70 லட்சத்திற்கான வங்கி வரைவோலையை தூத்துக்குடி மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் இன்று (17.5.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான், காவலர் சேசு ஆல்வினின் குடும்பத்தாரிடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் மண்டல மேலாளர் ஆல்வின் மார்ட்டின் ஜோசப், தூத்துக்குடி ஸ்பிக் நகர் வங்கியின் கிளை மேலாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

# அரசு பள்ளிகளில் நிலவும் காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும்: டிடிவி தினகரன் பேச்சு



சென்னை, மே.19

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள தும்மக்குண்டு அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியர் இல்லாத காரணத்தினால் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களில் 9 பேர் தமிழ் பாடத்தில் தோல்வியடைந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த வருத்தமளிக்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகளில் நிலவும் காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்ற ஆசிரியர்களின் தொடர் போராட்டத்தை தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை அலட்சியமாக எதிர்கொண்டதன் விளைவே, தற்போது தாய்மொழியாம் தமிழ் பாடத்திலேயே 9 மாணவர்கள் தோல்வியடையும் சூழலை உருவாக்கியுள்ளது.

குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும், வணிக நிறுவனங்களின் பெயர்களை தமிழில் மாற்ற வேண்டும், அரசாணைகளை தமிழ் மொழியிலேயே வெளியிட வேண்டும் என்றெல்லாம் உத்தரவிட்ட முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளிகளில் தமிழ் பாடத்தை பயிற்றுவிக்க போதுமான ஆசிரியர்களை நியமிக்கத் தவறியது ஏன்? என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்திருக்கிறது.


எனவே, தமிழ்ப் பாடத்தில் தோல்வியடைந்த 9 மாணவர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கி துணைத்தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதோடு, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் போதுமான ஆசிரியர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.என தெரிவித்துள்ளார்.

# பச்சிளம் பெண் குழந்தையை உயிரோடு மண்ணில் புதைக்க முயன்ற நர்சிங் மாணவி: புதுக்கோட்டையில் பரபரப்பு

புதுக்கோட்டை, மே.19

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அருகே பனையப்பட்டியை சேர்ந்தவர் வினோதா (வயது 21). இவர் இலுப்பூர் பகுதியில் தனியார் நர்சிங் கல்லூரியில் டிப்ளமோ நர்சிங் படித்து வருகிறார். இவரும், அதே கல்லூரியில் படித்து வரும் மாணவர் சிலம்பரசனும் காதலித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் வினோதா கர்ப்பமடைந்தார். அவருக்கு நேற்று வீட்டில் பெண் குழந்தை பிறந்தது. நர்சிங் மாணவி என்பதால் அவரே சுய பிரசவம் பார்த்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் திருமணத்திற்கு முன்பாக கருவுற்று குழந்தை பிறந்ததால், அந்த பச்சிளம் பெண் குழந்தையை கொன்று புதைக்க வினோதாவும், அவரது வீட்டில் இருந்தவர்களும் முடிவு செய்துள்ளனர்.



இதையடுத்து அருகில் உள்ள மயானத்திற்கு எடுத்து சென்று அந்த பச்சிளம் பெண் குழந்தையை உயிரோடு மண்ணில் புதைக்க முயன்றிருக்கின்றனர். இதனை கண்ட அக்கம்பக்கத்தினர் பனையப்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்ததும் இன்ஸ்பெக்டர் கவுரி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

இதற்கிடையில் அந்த பச்சிளம் குழந்தையை மண்ணில்புதைப்பதற்குள் அக்கம்பக்கத்தினர் மீட்டனர். மேலும் போலீசாரிடம் அந்த குழந்தையை ஒப்படைத்தனர். இதையடுத்து உடனடியாக அந்த பச்சிளம் பெண் குழந்தையை சிகிச்சைக்காக புதுக்கோட்டை ராணியார் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும் பிரசவித்த தாய் வினோதாவும் சிகிச்சைக்காக அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தாயும், சேயும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக காதலன் சிலம்பரசனை போலீசார் அழைத்து விசாரித்து வருகின்றனர்.

மேலும் அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் செந்தில்குமார் அளித்த புகாரின் பேரில் பனையப்பட்டி போலீசார் வழக்குப்பதிந்துள்ளனர். முதற்கட்ட விசாரணையில் காதலன் சிலம்பரசன் தூண்டுதல் பேரில் அந்த பச்சிளம் பெண் குழந்தையை காதலி, மண்ணில் புதைத்து கொலை செய்ய முயன்றது தொியவந்தது. அதன்படி வழக்குப்பதிந்து சிலம்பரசனை கைது செய்து, விசாரணைக்கு பின் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கோவையில் சட்டவிரோதமாக தங்கி இருந்த வங்காளதேசத்தை சேர்ந்த 13 பேர் கைது



கோவை, மே.19

கோவை துடியலூர் அருகே உள்ள குருடம்பாளையம் அடுத்த தொப்பம்பட்டியில் உள்ள ஒருதனியார் நிறுவனத்தில் சட்டவிரோதமாக தங்கி இருந்து வேலை செய்து வந்த வங்காளதேசத்தை சேர்ந்த சொரீப் (வயது 35), அவருடைய தம்பி லோதிப் அலி (29) ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் சொரீப் 3 வருடமும், லோதிப் அலி ஒருவருடமும் தங்கி இருந்து வேலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து கோவையில் உள்ள தனியார் மில் மற்றும் தனியார் நிறுவனங்களில் தங்கி இருந்து வேலை செய்யும் வடமாநிலங்களை சேர்ந்தவர்களை கணக்கெடுக்க போலீஸ் கமிஷனர் சரவணசுந்தர் உத்தரவிட்டார். இதையடுத்து போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பீளமேடு போலீஸ் இன்ஸ்பெக்டர் கந்தசாமி தலைமையிலான போலீசார் பீளமேடு போலீஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தனியார் மில்களில் கண்காணித்தனர். அப்போது அவர்கள் நேற்று வீரியம்பாளையம் பகுதியில் உள்ள ஒரு மில்லில் சோதனை செய்தனர். அப்போது அந்த மில்லில் ஏராளமான வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் தங்கி இருந்து வேலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பாக மேற்கு வங்காள மாநிலத்தை சேர்ந்த வாலிபர்கள் பலர் இருந்தனர். இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர். அதில் 13 பேருக்கு எவ்வித ஆவணங்களும் இல்லை. இதன் காரணமாக அந்த 13 பேர் மீது போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் அந்த 13 பேரையும் தனியாக அழைத்து விசாரணை நடத்தினர். அதில் அவர்கள் வங்காளதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து போலீசார் வங்காளதேசத்தை சேர்ந்த பாப்லு (26), சமீர் (19), ஷேஹாக் (26), அல்அமீன் (24), ஜித்தோன் (22), சொரீப் (29), போனி (30), ரூஷல் (42), முகமது அல்டாப் (45), ரஷீப் (22), டைடா (24), அராபத் (22), சையோன் (32) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் அனைவரையும் கோவை கோர்ட்டில் ஆஜர் படுத்தி சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

# நெல்லை அருகே தண்ணீர் வாளியில் மூழ்கி 1½ வயது குழந்தை பலி

நெல்லை, மே.19

நெல்லை மாவட்டம் முன்னீர்பள்ளம் சுப்பிரமணியபுரம் இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வருபவர் பிரதிபன். இவருக்கு மனைவி மற்றும் லிவிங்ஸ்டன் என்ற 1½ வயது ஆண் குழந்தை இருந்தான். நேற்று காலையில் குழந்தை லிவிங்ஸ்டன் அப்பகுதியில் உள்ள உறவினரின் வீட்டு முன்பாக விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அங்குள்ள தண்ணீர் வாளியில் லிவிங்ஸ்டன் தலைகுப்புற விழுந்து தத்தளித்தான். இதனைப் பார்த்த உறவினர்கள் அதிர்ச்சி அடைந்து அலறியடித்தவாறு உடனே குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால், ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியிலேயே குழந்தை லிவிங்ஸ்டன் பரிதாபமாக உயிரிழந்தான்.



இதுகுறித்து தகவல் அறிந்ததும் முன்னீர்பள்ளம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, இறந்த குழந்தையின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

# மாணவர்கள் இல்லாத பாடத்துக்கு ஆசிரியரை நியமிக்க உத்தரவிட முடியாது: ஐகோர்ட்டு தீர்ப்பு



சென்னை மே.19

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களுக்கான அறிவிப்பு கடந்த 2021ம் ஆண்டு செப்டம்பர் 9ந் தேதி வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின்படி, பயோகெமிஸ்ட்ரி பாட ஆசிரியர் பணிக்கு இந்திரா என்பவர் விண்ணப்பித்தார். இந்த தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சியும் பெற்றார்.

ஆனால், 2022ம் ஆண்டு செப்டம்பர் 17ந் தேதி வெளியான இறுதி அறிவிப்பாணையில் பயோகெமிஸ்ட்ரி பாடம் ஆசிரியர் பதவி இடம்பெற வில்லை. இதையடுத்து இந்த அறிவிப்பாணையை ரத்து செய்யக்கோரியும், தனக்கு பயோகெமிஸ்ட்ரி பாட ஆசிரியர் பணி வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் சென்னை ஐகோர்ட்டில் அவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதை எதிர்த்து இந்திரா மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீட்டு வழக்கு ஐகோர்ட்டு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஆர். நீலகண்டன், "தேர்வுக்கான அறிவிப்பில், காலியாக இருக்கும் பணியிடங்களுக்கு மட்டும் பணி நியமன ஆணை வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 2 பயோகெமிஸ்ட்ரி ஆசிரியர் பணியிடம் முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த படிப்பில் மாணவர்களே இல்லாததால், 2 பணியையும் பட்டியலில் இருந்து நீக்கி பள்ளிக்கல்வித்துறை கமிஷனர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ஆசிரியர் தேர்வு வாரியம் இறுதி அறிவிப்பு வெளியிட்டுள்ளது" என்றார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், "மனுதாரர் கோரிக்கையை ஏற்க முடியாது. மனுதாரருக்கு ஆசிரியர் பணி வழங்கினால், அவர் பாடம் நடத்த மாணவர்கள் இருக்க வேண்டும். வெறும் மேஜைகளுக்கு அவரால் பாடம் நடத்த முடியாது. எனவே, மாணவர்களே இல்லாத பாடத்துக்கு ஆசிரியராக மனுதாரரை நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட முடியாது.

அதனால் தனி நீதிபதி உத்தரவு சரியானது. இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்கிறோம்" என்று தீர்ப்பு அளித்துள்ளனர்.

# சட்டத்தின் துணையோடு வழக்கை எதிர்கொள்வேன்: சேவூர் ராமச்சந்திரன்

ஆரணி, மே.19

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சட்டப்பேரவை தொகுதி உறுப்பினராக இருப்பவர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன். இவர், கடந்த 2016 முதல் 2021ம் ஆண்டு வரையிலான அதிமுக ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருந்தார்.

அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் கடந்த 23.5.2016 முதல் 31.3.2021 வரையிலான கால கட்டத்தில் சேவூர் ராமச்சந்திரன் மற்றும் குடும்பத்தினர் வருமானத்துக்கு அதிகமாக ரூ.8 கோடியே 3 லட்சத்து 53 ஆயிரத்து 487 சேர்த்துள்ளது தெரியவந்தது. இது வருமானத்தைவிட 125 சதவீதம் அதிகமாகும். இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் சேவூர்எஸ்.ராமச்சந்திரன், அவரது மனைவி மணிமேகலை, மகன்கள் சந்தோஷ்குமார், விஜயகுமார் ஆகியோர் மீது திருவண்ணாமலை மாவட்ட லஞ்ச ஒழிப்புப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில், ஆரணியில் உள்ள சேவூர் எஸ்.ராமச்சந்திரன் வீட்டில் ஆய்வாளர் அருள்பிரசாத் தலைமையிலும், அருகில் உள்ள அவரது மகன் சந்தோஷ்குமார் வீட்டில் ஆய்வாளர் மைதிலி தலைமையில் இன்று லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். காலை 6.30 மணிக்கு தொடங்கிய தற்போது நிறைவு பெற்றுள்ளது. சுமார் 15 மணி நேரம் நடந்த சோதனையில் சொத்து ஆவணங்கள், வங்கி லாக்கர் சாவி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சோதனை நிறைவுக்கு பிறகு செய்தியாளர்கள் சந்திப்பில் சேவூர் ராமச்சந்திரன் கூறியதாவது:

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி துணையோடும், சட்டத்தின்துணையோடும் இந்தவழக்கை எதிர்கொள்வேன். பொய்யான வழக்கிலிருந்து மீண்டு வருவேன். லஞ்ச ஒழிப்புத்துறை எந்த பொருளையும் பறிமுதல் செய்யவில்லை; சொத்து ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

19.5.2025



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கார்த்திக் சிதம்பரம் திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திற்கு வருகை புரிந்தார். அப்போது எங்களது வழக்கறிஞர் அலுவலகத்திற்கும் வருகை தந்து எங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி சென்றார். கட்சி அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் திரு .தென்னரசு அவர்களும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி எஸ் காளிமுத்து அவர்களும் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# கும்பக்கரை அருவியில் குளிக்க அனுமதி



தேனி, மே.19

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. இந்த அருவிக்கு தேனி மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்த அருவிக்கு கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து நீர்வரத்து இருக்கும்.

கடந்த சில நாட்களாக கும்பக்கரை அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அருவியின் பாதுகாப்பு கம்பிகள் சேதமடைந்துள்ளது. இந்த நிலையில் பராமரிப்பு பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து பாதுகாப்பு கருதி, நேற்று ஒரு நாள் மட்டும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்தனர். இந்த நிலையில் பராமரிப்பு பணிகள் முடிவடைந்ததை அடுத்து கும்பக்கரை அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்.

# விழுப்புரம்: குடும்ப பிரச்சினையில் இளைஞர் தூக்குப்போட்டு தற்கொலை

விழுப்புரம் மே.19

விழுப்புரம் சுதாகர் நகர் பகுதியில் வசித்து வந்தவர் இளங்கோ (33 வயது). பெட்டிக்கடை வைத்துள்ள இவருக்கு திருமணமாகி 3½ ஆண்டுகள் ஆகிறது. 6 மாத ஆண் குழந்தை உள்ளது.

கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் குடும்ப பிரச்சினை காரணமாக நேற்று முன்தினம் இரவு இளங்கோ, தனது வீட்டின் படுக்கை அறையில் மின்விசிறியில் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்த புகாரின்பேரில் விழுப்புரம் தாலுகா போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தினசரி பலன்கள் (19.5.2025)

1. மேஷம்

நன்மைகள்: வசுமதி யோகம் காரணமாக தொழில் மற்றும் நிதி வளர்ச்சி.

பரிந்துரை: புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடுங்கள்.

2. ரிஷபம்

நன்மைகள்: நீதிமன்ற விவகாரங்களில் சாதகமான முடிவுகள்.

பரிந்துரை: முதலீடுகளில் கவனம் செலுத்துங்கள்.

3. மிதுனம்

நன்மைகள்: புதிய வாய்ப்புகள் மற்றும் புகழ் கிடைக்கும்.

பரிந்துரை: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

4. கடகம்

நன்மைகள்: வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் மற்றும் முதலீடுகள்.

பரிந்துரை: புதிய வாய்ப்புகளை பயன்படுத்துங்கள்.

5. சிம்மம்

நன்மைகள்: போட்டிகளில் வெற்றி.

பரிந்துரை: செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

6. கன்னி

நன்மைகள்: பல்வேறு துறைகளில் வெற்றி.

பரிந்துரை: தன்னம்பிக்கையை உயர்த்துங்கள்.

7. துலாம்

நன்மைகள்: பயணங்கள் மற்றும் புதிய பொறுப்புகள்.

பரிந்துரை: செலவுகளை திட்டமிட்டு நிர்வகிக்கவும்.

8. விருச்சிகம்

நன்மைகள்: சிறந்த செய்திகளும் தொழில் வாய்ப்புகளும்.

பரிந்துரை: புதிய வாய்ப்புகளை பயன்படுத்துங்கள்.

9. தனுசு

நன்மைகள்: பொதுவாக சாதாரண நாள்.

பரிந்துரை: தன்னிலைப்பற்றிய சிந்தனை பயனளிக்கும்.

10. மகரம்

நன்மைகள்: சவால்கள் இருந்தாலும் துணையின் ஆதரவு.

பரிந்துரை: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

11. கும்பம்

நன்மைகள்: புதிய வாய்ப்புகள்.

பரிந்துரை: முதலீடுகளில் கவனம் செலுத்துங்கள்.

12. மீனம்

நன்மைகள்: தன்னம்பிக்கை மற்றும் மன அமைதி.

பரிந்துரை: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

# விசிக பேரணி ஜூன் 14ம் தேதிக்கு மாற்றம்



திருச்சி, மே.19

திருச்சியில் வருகிற 31ஆம் தேதி விசிக சார்பில் 'மதச்சார்பின்மை காப்போம்' என்ற பெயரில் மாபெரும் எழுச்சி பேரணி நடைபெற இருப்பதாக அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்தார். இதற்கான மண்டல வாரியான ஆய்வு கூட்டம் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிலையில், திருச்சியில் வருகிற 31ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த விடுதலை சிறுத்தைகள் பேரணி ஜூன் 14ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

# கடலூர்: ஊஞ்சல் ஆடியபோது கல் தூண் சாய்ந்து சிறுவன் சாவு



கடலூர் மே.19

கடலூர் மாவட்டம் புதுப்பேட்டை அருகே பனப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் வினோத்குமார். தொழிலாளி. இவரது மகன் பூர்விக் (9 வயது). இவன் தனியார் பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தான். வினோத்குமாரின் பக்கத்து வீட்டில் சிமெண்டு கல்தூணில் ஊஞ்சல் கட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பூர்விக் அந்த ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக் கொண்டிருந்தான்.

அப்போது எதிர்பாராதவிதமாக அந்த கல் தூண் சாய்ந்து பூர்விக் மீது விழுந்தது. இதில் பலத்த காயமடைந்த சிறுவனை அக்கம் பக்கத்தினர் பூர்விக்கை மீட்டு சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டான்.

அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி பூர்விக் பரிதாபமாக இறந்தான். இது குறித்த புகாரின் பேரில் புதுப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இந்த கால ரசிகனை ஏமாற்றினால் அவனுக்குப் பிடிக்காது இயக்குநர் சேரன் பேட்டி



சேரனின் இயக்கத்தில் அவரே நடித்து வெளியான படம் 'ஆட்டோகிராப்'. 2004ம் ஆண்டு வெளியான இந்தப் படம், அந்த நேரத்தில் பலரின் மலரும் நினைவுகளை ஆழ்மனதில் இருந்து கிளறி எழச்செய்தது. 21 ஆண்டுகளுக்குப் பிறகு, 'ஆட்டோகிராப்' படத்தை மீண்டும் மறுவெளியீடு செய்ய உள்ளனர். இதற்காக ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கிய டிரெய்லரையும் வெளியிட்டிருந்தனர். சமீபத்தில் ஒரு பேட்டியில், சேரனிடம், 'ஆட்டோகிராப்' படத்தின் மறு வெளியீடு பற்றி கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:

அந்தப் படம் 2 மணி நேரம் 50 நிமிடம் கொண்டது. அன்றைக்கு இருந்த பொறுமையை, இன்று நாம் ரசிகர்களிடம் எதிர்பார்க்க முடியாது. அதனால் படத்தின் 20 நிமிடக் காட்சியை குறைத்திருக்கிறேன். சில காட்சிகளை இன்று பார்க்கும்போது, எனக்கே இது கிரிஞ்ச், பூமர் என்று தோணும். அந்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகணும். அதனால்தான் தேவையில்லாத காட்சிகளை வெட்டி விட்டேன். அதோடு இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப ஒலியில் மாற்றம் செய்து, ரீவொர்க் பண்ணியிருக்கிறேன்.

இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்றபடி 'ஆட்டோகிராப்' தயார் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு தூரம் சிரமத்தை பார்க்காமல் உழைப்பதற்கு காரணம், இன்றைக்கு இருக்கிற பார்வையாளர்கள் முட்டாள் இல்லை. அவர்கள் புத்திசாலி. அந்த ரசிகனை ஏமாற்றினால், அவனுக்குப் பிடிக்காது. எனவே அவனுக்கான பொறுப்போடு நாமும் படத்தை கொடுக்கணும்னு நினைக்கிறேன்" என்றார்.

# ஸ்ரீநாத் பாஸி நடித்துள்ள ஆசாதி படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



பிரபல மலையாள நடிகர் ஸ்ரீநாத் பாசி. இவர் '22 பீமேல் கோட்டயம்', 'உஸ்தாத் ஓட்டல்', 'கும்பளங்கி நைட்ஸ்', 'வைரஸ்' உட்பட பல படங்களில் நடித்துள்ளார். 'மஞ்சுமெல் பாய்ஸ்' படத்தில் நடித்து தமிழ் ரசிகர்களின் மத்தியில் பிரபலமானவர் நடிகர் ஸ்ரீநாத் பாசி.

இவர் தற்போது மருத்துவம் தொடர்பான திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ள 'ஆசாதி' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தினை ஜோஜு ஜார்ஜ் இயக்கியுள்ளார். இதில் விஜயகுமார், ரவீனா ரவி, டிஜி ரவி, ராஜேஷ் சர்மா மற்றும் பலர் நடித்துள்ளனர். லிட்டில் க்ரூ புரொடக்ஷன் சார்பில் பைசல் ராஜா இப்படத்தை தயாரித்துள்ளார்.

திரில்லர் கதையில் உருவாகி உள்ள இப்படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 23ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் தமிழ்நாட்டு வெளியீட்டு உரிமையை சபையர் ஸ்டுடியோஸ் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# "தக் லைப்" புரோமோஷன் பணிகள் தீவிரம்.... வைரலாகும் புகைப்படங்கள்



36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் வருகிற ஜூன் 5ம் தேதி திரைக்கு வருகிறது.

இப்படத்தின் டிரெய்லர் இன்று வெளியானது. இப்படத்தின் இசை வெளியீட்டு விழா வருகிற 24ந் தேதி சென்னை சாய்ராம் கல்லூரியில் இசை வெளியிட்டு விழா நடைபெறும் என்றும் இந்த விழாவில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் லைவ் பர்பாமென்ஸ் செய்வார் எனவும் படக்குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இந்த படத்தின் புரோமோஷன் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியாவிலும் புரோமோஷன் பணிகளை நடத்த படக்குழு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் கமல்ஹாசன், மணிரத்னம், சிம்பு, ஏ.ஆர். ரகுமான், அபிராமி, திரிஷா ஆகியோர் தக் லைப் பட புரோமோஷன் பணியின் போது எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# உலக டேபிள் டென்னிஸ்: முதல் சுற்றில் ஸ்ரீஜா அகுலா தோல்வி



உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி கத்தார் தலைநகர் தோகாவில் நேற்று தொடங்கியது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய முன்னணி வீராங்கனை ஸ்ரீஜா அகுலா 119, 811, 611, 511, 211 என்ற நேர்செட்டில் தாய்லாந்தின் சுதாசினியிடம் தோற்று வெளியேறினார்.

பெண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் அஹிகாசுதிர்தா முகர்ஜி இணையும், ஆண்கள் இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மானவ் தாக்கர்மனுஷ் ஷா ஜோடியும் வெற்றி பெற்றது.

# 40 ஆண்டுகளுக்குப் பிறகு இத்தாலி ஓபனில் சாம்பியன் பட்டம் வென்ற இத்தாலி வீராங்கனை



இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோமில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 3வது இடத்தில் இருக்கும் கோகோ காப் (அமெரிக்கா), 5ம் நிலை வீராங்கனையான ஜாஸ்மின் பாவ்லினியை (இத்தாலி) எதிர்கொண்டார்.

1 மணி 29 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பாவ்லினி 64, 62 என்ற நேர் செட்டில் கோகோ காப்பை தோற்கடித்து முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். 40 ஆண்டுகளுக்குப் பிறகு இத்தாலி வீராங்கனை ஒருவர் இத்தாலி ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. முன்னதாக கடந்த 1985ம் ஆண்டு ரபேல்லா ரெக்கி சாம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

# சிஎஸ்கே ஆர்சிபி ரசிகர்கள் மோதல் விவகாரம்: இந்திய முன்னாள் வீரர் கண்டிப்பு



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இதனிடையே இந்தியா பாகிஸ்தான் ஏற்பட்ட போர்ப்பதற்றம் காரணமாக ஐ.பி.எல். தொடர் ஒரு வார காலம் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது இந்தியா பாகிஸ்தான் சண்டை முடிவுக்கு வந்து இயல்பு நிலை திரும்பியதை தொடர்ந்து ஐ.பி.எல். போட்டி இன்று தொடங்குகிறது.

ஐ.பி.எல். வரலாற்றில் ரசிகர்களிடையே செல்வாக்கு மிகுந்த அணிகளாக சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளங்கி வருகின்றன. இதனால் இவ்விரு அணிகள் மோதும் போட்டிகளில் மைதானம் முழுவதும் ரசிகர்கள் சம அளவில் அணிவகுத்து நிற்பர்.

முன்னதாக கடந்த வருடம் நடைபெற்ற மிக முக்கியமான லீக் ஆட்டத்தில் சென்னை அணியை தோற்கடித்து பெங்களூரு பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியது. இதனை அந்த அணியின் வீரர்களும், ரசிகர்களும் வெறித்தனமாக கொண்டாடி தீர்த்தனர். அன்றைய நாள் முதல் சிஎஸ்கே மற்றும் ஆர்சிபி ரசிகர்களிடையே மோதல் நிலவி வருகிறது.

இதனிடையே இந்த வருடம் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற சென்னை பெங்களூரு போட்டியின்போது ஆர்சிபி ரசிகர்களை கிண்டலடிக்கும் விதமாக சிஎஸ்கே ரசிகர்கள் நடந்து கொண்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக சின்னசாமி மைதானத்தில் இவ்விரு அணிகள் மோதிய போட்டியின்போது 2016, 2017 ஆகிய வருடங்களில் சிஎஸ்கே அணி ஐ.பி.எல். தொடரில் விளையாடத் தடை பெற்றதை கிண்டல் செய்யும் விதமாக கருப்பு வெள்ளை (ஜெயில் ஜெர்சி) டீசர்ட் வாங்கி அதனை மைதானத்திற்கு கொண்டு வந்து கிண்டலடித்தனர்.

இப்படி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இவ்விரு அணிகளின் ரசிகர்களின் மோதலை கண்டிக்கும் விதமாக இந்திய முன்னாள் வீரரான ராபின் உத்தப்பா சில கருத்துகளை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "அது மிகவும் தீவிரமாக இருந்தது. மைதானத்திற்கு வெளியே பேருந்து கிளம்பும்போது ஆர்சிபி ரசிகர்கள் சிஎஸ்கே வீரர்களை கேலி செய்தனர். அது நான் பார்த்த ஒரு விஷயம், அது மோசமானது என்று நான் நினைத்தேன். நான் பார்த்த மற்றொன்று ரசிகர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது. பெண்கள் கேலி செய்யப்படுவதை நான் பார்த்தேன். இது மிகவும் விரும்பத்தகாததாக இருந்தது, மிகவும் நேர்மையாகச் சொன்னால் கடந்த வருடம் சென்னை மைதானத்திலும் இவ்வாறு நடந்ததைப் பார்த்தோம்.

இதுமிகவும்தீவிரமாகிவிட்டது.அவர்கள்கருப்புகோடுகளால் குறிக்கப்பட்ட வெள்ளை டிசர்ட்களை பிடித்துக்கொண்டு, சிஎஸ்கே வுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் அதில் தோனியின் எண்ணையும், அதன் கீழ் 'தல' என்பதையும் எழுதி சிஎஸ்கே அணி 2 வருடங்கள் சிறைக்கு சென்றதாக கிண்டலடித்தனர். இது விளையாட்டிற்கு அப்பாற்பட்டதாக மாறி வருகிறது. இது எனக்கு கவலை அளிக்கிறது. ஏனென்றால் நாளின் இறுதியில், இது ஒரு விளையாட்டு" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.